இருப்பதால் 1955-க்குப் பிறகு ஓய்வுபெற்றவர்கள் கணக்கு மட்டும் எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதற்கு முன்னுல் உள்ளவர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை.

Retirement age of teachers

* 66 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal with the Government to raise the age of retirement of teachers to sixty years?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

THIRU K. VINAYAKAM: Sir, in view of the paltry remuneration which the teacher gets while working as a teacher and also in view of the high cost of living that is now prevailing in the country, will the Government think of just raising the age of retirement of teachers to 58 years—they now retire at the age of 55 and this should be increased by three-years—so as to help that community at large?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 58 வரையில் அவர்கள் ஓய்வுபெறுகிற வயதுப் உயர்த்தப்பட்டு இருக்கிறது. அரசாங்கப் பள்ளிகள், மற்றவைகளில். தனியார் பள்ளிகளில் 58-க்குப் பிறகு 60 வயது வரை வேலை கொடுக்கலாம் என்றிருக் கிறது.

திரு. வை. சுவாமிநாதன்: கலப்பு மணம் செய்துகொண்டுள்ள ஆசிரியர்களுக்கும், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஆசிரியர்களுக்கும் ஏதாவது உபகாரச் சம்பளம் கொடுக்க அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக் கிறதா? கலப்புத் திருமணம் அலவன்ஸ், குடும்பக் கட்டுப்பாடு அலவன்ஸ் என்று ஏதாவது அவர்களுக்குக் கொடுக்க உத்தேச மிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இப்போது இல்லை.

திரு. எஸ். ராமச்சந்திரன்: ஆசிரியர்கள் தினம் மணிக் கணக்கில் பேச வேண்டியிருப்பதால் வயதான காலத்தில் பலவித நோய்களுக்கு அவர்கள் ஆளாக வேண்டியிருப்பதை உணர்ந்து அவர்களுக்கு நன்மை செய்யும் விதத்தில் அவர்கள் சம்பள விகிதத்தை உயர்த்தி அவர்கள் ஓய்வுபெறும் வயதை 52 ஆகக் குறைக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அப்படியில்லை. ஆசிரியர்கள் ஓய்வுபெறும் வயதை உயர்த்தவேண்டுமென்று கோரிக்கைகள் பல பகுதிகளில் இருந்து வருகின்றனவே தவிர குறைக்க வேண்டுமென்று வரவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஆசிரியர்களுக்கு கொடுக்கப் படும் சம்பளம், பஞ்சப்படி இரண்டையும் ஒன்றாகச் சேர்ப்பதற் கான உத்தேசம் உண்டா?

1967 ஜூன் 24]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படி உத்தேசம் ஒன்றுமில்லை.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மீண்டும் ஒரு வருஷம் வேலை பார்ப்பதற்கு எக்ஸெம்ப்ஷன் இருப்பதை அரசாங்கம் தொடர்ந்து நீடிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனியார் பள்ளிகளில் 55 வயதுக்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாம், அவர்கள் 60 வயது அடைகிற வரையில் என்று சொல்லியிருக்கிறது. அதை 60 வயதுக்கு மேல் நீடிக்கும் எண்ணம் இல்லை.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister for Education to state why there is discrimination in the age of retirement between Government institutions and private aided institutions?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அது நீண்டகாலமாகவே இருந்து வருகிற சட்டப்படி தனியார் பள்ளிகளுக்கு அனுமதி அளிக்கும்போது 60 வயது வரையில் வைத்துக் கொள்ளலாம் என்று சட்டத்தில் இருக்கிறது. இப்போது இருக்கக் கூடிய மாறுபாட்டைப் போக்க நடவடிக்கை எடுக்கலாமா என்பது யோசனையில் இருக்கிறது.

திரு. கே. சகாதேவக் கண்டர் : ஆசிரியர்கள் பாதுகாப்பு நிதி செலுத்தி வருகிறார்கள். அதற்கு 4 சத விகிதம் வட்டி கொடுக்கப் படுகிறது. தனியாரிடத்தில் கொடுத்தால் 9 சத விகிதம் வட்டி கிடைக்கும். வட்டி விகிதத்தை உயர்த்த அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : துணைக் கேள்வி, மூலக் கேள்விக்குத் தொடர்புடையது அல்ல.

Bridge across Kusasthali river

* 67 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to construct a bridge or Causeway across Kusasthali river near Pallipet, Tiruthani taluk, Chingleput district?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த அல்லது ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் முக்கியத்துவம் ஏற்படுத்தக்கூடிய சாலைகளை அமைத்தல், மேம்பாடு செய்தல் குறித்த வேலைத்திட்டத்தின்கீழ் நான்காம் திட்டக்கால அளவில் உதவி மானியம் வழங்கப் பெறுவதற்காக இம்மாநில அரசு இந்திய அரசுக்குப் பட்டியல் ஒன்றை அனுப்பியுள்ளது. இப்பட்டியலில் 10 சாலை வேலைகள் பற்றிய விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கேள்வியில் குறிப்பிடும் பள்ளிப்பட்டு அருகேயுள்ள குசஸ்தலி ஆற்றுப்பாலம் வேலை மேற் சொன்ன 10 வேலைகளில் மூன்றாவது வேலையாக அமைகிறது.

திரு. கே. விநாயகம் : சார், அந்த குசஸ்தலி நதியின் மேல் கட்டப்படப் போகிற பாலத்தை டாம்-கம்-ஓவர்பிரிட்ஜ் மாதிரி